# மெட்ரோ ரயில் நேரம் மாற்றம் ஐந்து நிமிடத்துக்கு ஒரு ரயில்



**சென்னை, ஆக. 27–**

பயணியர் வருகை அதிகரித்துள்ளதால், மெட்ரோ ரயில்கள், நேற்று முதல், ஐந்து நிமிட இடைவெளியில் இயக்கப்படுகின்றன.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை இடையே இயக்கப்படும் ரயில்கள், பயணியர் போக்குவரத்து அதிகம் உள்ள, காலை மற்றும் மாலை வேளைகளில், 7 நிமிட இடைவெளியிலும், சென்ட்ரல் – பரங்கிமலை இடையே, 10 நிமிட இடைவெளியிலும் இயக்கப்பட்டன.

இவ்வழிகளில், மற்ற நேரங்களில், 14 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்பட்டு வந்தன. ரயில்களில் பயணியர் போக்குவரத்து, லட்சத்தை தாண்டியுள்ளதால், ரயில்கள் இயக்க இடைவெளி நேரம் குறைக்கப்பட்டு உள்ளது.

இந்த இரு வழிகளிலும், பயணியர் போக்குவரத்து அதிகம் உள்ள காலை, 8:00 மணியில் இருந்து, 11:00 மணி வரையும், மாலை, 5:00 மணியில் இருந்து இரவு, 8:00 மணிவரையும், ஐந்து நிமிட இடைவெளியில், நேற்று முதல் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

மற்ற நேரங்களில், 14 நிமிட இடைவெளியில், ரயில்கள் இயக்கப்படுகின்றன.